செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100
सत्यमेव जयते

## இலக்கியப் புலம்

நடத்தும்

# தமிழ்ச் செவ்விலக்கிய ஆய்வு நெறிமுறைகள்

## (Critical Studies on Ancient Tamil Classics)

பயிலரங்கம் – 02

(06.06.2023 – 15.06.2023)

## அறிவிப்பும் அழைப்பும்

தனக்கென மிகப் பழமையான இலக்கிய, இலக்கண வளங்களைப் பெற்று, உலக மொழிகள் பலவற்றுள்ளும் உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்வது தமிழ் மொழியாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முன்னர் தோன்றிய செழுமையான சங்கப் பாக்களும், பின்னர் தோன்றிய காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் முதலானவையும் தமிழ் மொழியின் தனிப்பெருஞ் செல்வங்களாகும். இந்த இலக்கியங்கள் குறித்துக் கால வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் புதுப்புதுச் சிந்தனைகள் செலுத்தி ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

தற்காலத்தில், தமிழ் இலக்கியம், இலக்கணம் குறித்த ஆய்வுகள் பல்வேறு ஆய்வு முறைகளைக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றன. தமிழ் மரபார்ந்த கோட்பாட்டு நோக்கிலும், மேலை இலக்கியக் கோட்பாட்டு நோக்கிலும் பல புதிய ஆய்வுகள் வெளிவந்துள்ளன. தமிழ்ச் செவ்விலக்கிய ஆய்வுக் களங்களும் வளம்பெற்று வருகின்றன.

ஆய்வுச் சிக்கலை உள்ளடக்கிய தலைப்பைத் தெரிவுசெய்து, அச்சிக்கலுக்குத் தீர்வுகாண, அவ் ஆய்வுத் தலைப்பு தொடர்பான மூல உண்மைக் கூறுகளைத் திரட்ட

வேண்டும். அத் தரவுகள் மூலமாகக் கருதுகோள்களையும் ஊகத்தையும் உருவாக்கி, அதன் அடிப்படையில் உண்மைக் கூறுகளைப் பகுப்பாய்வு செய்து, சிக்கலுக்குத் தீர்வுகண்டு உண்மை காண்பதையும் அல்லது புதிய ஒன்றைக் கண்டுபிடிப்பது அல்லது உறுதிப்படுத்துவதையும் மையமாகக் கொண்டு ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும்; அதன்வழியாகத் தமிழியல் ஆய்வுக் களமும் வளம்பெற வேண்டும்.

ஆய்வின் அடிப்படையாக அமையும் ஆய்வு நெறிமுறைகளைப் பற்றி ஆராய்ச்சிப் படிப்பில் ஈடுபடும் ஆய்வாளர்கள் ஒவ்வொருவரும் நன்கு அறிந்திருக்க வேண்டியது அடிப்படையாகின்றன. அதனினும், தொன்மைசான்ற தமிழ்ச் செவ்விலக்கியங்கள் குறித்த ஆய்வுகளை நிகழ்த்துவோர் தனிக் கவனமும் கூர்மையும், முன் ஆய்வுகள் குறித்த தெளிவும் கொண்டிருக்க வேண்டியது மிக மிகத் தேவையாகின்றது.

தமிழியல் ஆய்வு மரபை முறையாக நெறிப்படுத்தி மேலும் வளப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இவற்றைக் கருத்தில்கொண்டு தமிழ்ச் செவ்விலக்கியங்கள் குறித்த ஆய்வு நெறிமுறைகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் இப்பயிலரங்கம் நடத்தப்படவுள்ளது.

தமிழியல் சார்ந்த ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்கலாம்.

தமிழியலில் புலமை பெற்ற பேராசிரியர்கள் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளார்கள். பயிலரங்கின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை - 25.
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 06.06.2023 முதல் 15.06.2023 வரை (தொடர்ந்து 10 நாள்கள்).
3. பயிலரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. மத்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.

7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து workshop.02@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தொடர்புகொள்ள வேண்டும்.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக ஆணை அனுப்பி வைக்கப்படும்.
11. விண்ணப்பம் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: 01.06.2023. இதற்குப் பின்வரும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 38 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 02.06.2023 அன்று தகவல் தெரிவிக்கப்படும்.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**(இயக்குநர்)**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

## இலக்கியப் புலம்

நடத்தும்

# தமிழ்ச் செவ்விலக்கிய ஆய்வு நெறிமுறைகள்

## (Critical Studies on Ancient Tamil Classics)

## பயிலரங்கம் - 02

(06.06.2023 – 15.06.2023)

### விண்ணப்பப் படிவம்

<table>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">பெயர்|<br>Name</td><td colspan="2">தமிழ்</td><td colspan="5"></td><td colspan="2" rowspan="4">நிழற்படம்/<br>Photo</td></tr>
<tr><td colspan="2">English</td><td colspan="5"></td></tr>
<tr><td>2.</td><td>பிறந்த நாள் / வயது<br>Date of Birth/ Age</td><td colspan="7"></td></tr>
<tr><td>3.</td><td>பாலினம் | Gender (✓)</td><td>ஆண்/<br>Male</td><td colspan="2"></td><td>பெண்/<br>Female</td><td></td><td>திருநங்கை/<br>Transgender</td><td></td></tr>
<tr><td>4.</td><td colspan="4">வகுப்பு | Class (✓)</td><td>பொது/<br>General</td><td></td><td>இ.பி.வ.|<br>OBC</td><td></td><td>பட்டியல் இனம் |<br>SC/ ST</td><td></td></tr>
<tr><td>5.</td><td colspan="4">கல்வித் தகுதி |<br>Educational Qualification</td><td colspan="6"></td></tr>
<tr><td>6.</td><td colspan="4">ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு | Date of Joining & year in M. Phil & Ph.D.</td><td colspan="6"></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 7. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு \| M. Phil & Ph.D. Research Topic | |
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்) \| University / College/Institute Address (Contact number & Email) | |
| 9. | இல்ல முகவரி & தொடர்பு எண் \|Residential address & Contact number | |
| 10 | புலன எண் \| WhatsApp number | |
| 11 | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக \| Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் \| Yes<br>இல்லை\| No |
| | | |

(கையொப்பம்)

நெறியாளர் /துறைத் தலைவர்/

முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்

இடம்:

நாள்: